




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (23.06.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. சந்திரசேனன் நாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளம்) திரு.சுப்பிரமணியன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண் : 393/2016 நாள்: 23.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில்,**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**இன்று (23.06.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (23.06.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 20.06.2016 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 39.25 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 72.45 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 13.71 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 13.81 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 17.50 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 54.12 அடியும் உள்ளது.

20.06.2016 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 93.295 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 20.06.2016 முடிய 5565 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 4137 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 299 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 10,001 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 570 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 2181 மெட்ரிக் டன்னும், உற்பத்தியாளர்களிடம் 600 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 1470 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 4811 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் பிப்ரவரி மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

தெங்கம்புதூர் கிராமத்திற்குட்பட்ட பால்குளம் தெற்கு பகுதியில் உள்ள சாலையில் மின் பாதைகளுக்கு இடையில் புதியதாக இரு மின்கம்பங்கள் நிறுவப்பட்டு மின்பாதை சரி செய்யப்பட்டுள்ளது எனவும், தோவாளை வட்டம் குமாரபுரம் கிராமம் புலஎண் 660-ல் அமைந்துள்ள அத்திகுளத்தில் திடக்கழிவு, காற்றாலை அமைப்பதற்கு கட்டப்பட்ட பவுண்டேசன் ஆகியவை அகற்ற ஆக்கிரமிப்புதாரர்களுக்கு 16.02.2016 அன்று தாக்கீது கொடுக்கப்பட்டுள்ளது. விரைவில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் எனவும், பாரம்பரிய நெல்லினை கலப்பின அபிவிருத்தி மூலம் அதிக நெல்மணிகள் மற்றும் குட்டையான புதிய இரகமாக வெளியிடுவதற்கு வரும் காலங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ், நல்லமிளகு பயிரிடும் விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்தில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. இருபதாயிரம் மதிப்புள்ள நல்லமிளகு வேர் விட்ட குச்சிகள் மற்றும் தேவையான இரசாயன உரங்கள் போன்றவை வழங்கப்படுகிறது. நல்லமிளகு சாகுபடி தென்னை பயிரிடும் இடத்திலும் செய்யலாம். இம்மானியத்தை பெறுவதற்கு 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களுடன் குடும்ப அட்டை நகல், நிலத்தீர்வை ரசீது நகல், அடங்கல் போன்ற ஆவணங்களுடன் தங்கள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி விண்ணப்பம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும் எனவும், கல்குளம் தாலுகா தலக்குளம் வில்லேஜ் கணியான்குளத்தின் மடை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணியில் சேர்க்கப்பட்டு முன்னுரிமை

அளித்து வரும் நிதியாண்டில் சரி செய்யப்படும் எனவும், சுசீந்திரம் கால்வாயின் அருகில் உள்ள விளைநிலங்களில் பயிர்களை அறுவடை செய்ய ஏதுவாக சுசீந்திரம் கால்வாயில் தற்போது தண்ணீர் அடைக்கப்பட்டுள்ளது. மேலும் சுசீந்திரம் குளம் மறுகால் ஷட்டர் மற்றும் கல்கட்டு சரிசெய்ய பொதுப்பணித்துறையின் (நீர்வளம்) பராமரிப்பு நிதிக்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், கடந்த சில மாதங்களாக நமது மாவட்டத்தில் ஏற்பட்ட சூறைகாற்று மற்றும் கனமழையினால் பாதிக்கப்பட்ட வாழை மற்றும் இரப்பர் விவசாயிகளின் நலன்கருதி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக தோட்டக்கலைதுறை மற்றும் வருவாய் துறை மூலம் கணக்கெடுக்கும்பணி நடைபெற்று வருகிறது. சம்பந்தபட்ட அலுவலர்களிடமிருந்து அறிக்கை கிடைக்கும்பட்சத்தில், அதனை உடனடியாக அரசாங்கத்திற்கு அனுப்பி, உரிய நிவாரணம் பெற வழிவகை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பாக, சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன்களை தள்ளுபடி செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகள் தங்களது நன்றியினை தெரிவித்துக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. சந்திரசேனன் நாயர், கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் திரு. நடுக்காட்டு ராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளம்) திரு.சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் திருமதி. அனிட்லா சாந்தி, உதவி பொறியாளர்கள் திரு. வல்சன் போஸ், திரு. கதிரவன், திருமதி. வைஷ்ணவி, செயற்பொறியாளர் (வேளாண் விற்பனைதுறை) திரு. ஆனந்தராஜா, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.முத்துகுமார், வட்டாட்சியர்கள் திரு. மூர்த்தி, திரு. குமாரதாஸ், திருமதி. ஷீலா, திருமதி. புவனேஸ்வரி, செயல் அலுவலர்கள் திரு. ஆம்புரோஸ், திரு. ஏசுபாலன், திரு. பிராங்கலின், திரு. சுருளிவேல், திருமதி. உஷா, திருமதி. சுஷ்மா, திருமதி. வினிதா உள்ளிட்ட அரசு அலுவலர்களும், திரு. வின்ஸ் ஆன்றோ, புலவர் செல்லப்பா, திரு. முஸ்தபா, திரு. பத்மதாஸ், திரு. ஏசுதாஸ், திரு. தங்கப்பன் உள்ளிட்ட விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.